# பாரதிய ஜனதா கட்சி

(மத்திய அலுவலகம்)

11, அசோக் சாலை, புதுடெல்லி 110001

தொலைபேசி: 23005700; தொலைநகல்: 23005787

தேதி: பிப்ரவரி 05,2013 02 05

## பாஜகவின் மூத்த தலைவர் டாக்டர் முரளி மனோகர் ஜோஷியின் பத்திரிகை அறிக்கை

ஐ.நா பாதுகாப்பு சபையின் ஜூன் 2009 தீர்மானமும், அமெரிக்க கருவூலத் துறை ஜூலை 2009 இல் பகிரங்கமாக வெளியிட்ட அறிவிப்பும் சம்ஜூதா குண்டு வெடிப்புக்கு லஷ்கர் இ தொய்பாவின் தலைமை ஒருங்கிணைப்பாளரான ஆரிப் கஸ்மானிதான் நிதி உதவி அளித்ததை உறுதிசெய்துள்ளது. அந்த குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு ஆட்களை அல்கொய்தா இயக்கம் வழங்கியுள்ளது. அந்த குண்டு வெடிப்புக்காக பாகிஸ்தானியத் தீவிரவாதிகள் பயன்படுத்தப்பட்டதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக்கும் ஜனவரி 2010 இல் கூறியுள்ளார். 2010 இல் டேவிட் கோல்மென் ஹெட்லியின் மூன்றாவது மனைவி ஃபைசா ஔதல்ஹா அளித்த வாக்குமூலமும், இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் கோல்மென் ஈடுபட்டதையும், எதுவும் அறியாமலேயே தான் உடந்தையாக இருந்ததையும் தெரிவிக்கிறது (பார்க்க வாக்கு மூலத்தின் 26 ஆவது பத்தி). அத்துடன் நார்கோ சோதனையில் சிமி இயக்கத்தின் தலைவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் இந்த தாக்குதலுக்கு உதவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானைச் சேர்ந்த கராச்சி வியாபாரியான ஆரிப் கஸ்மானி, அல் கொய்தா மற்றும் லக்சர் இ தொய்பா, டேவிட் கோல்மென் ஹெட்லி மற்றும் அவரது மூன்றாம்

மனைவி பைசா ஔதல்ஹா ஆகியோர் கூட்டு சேர்ந்து சிமியின் உதவியுடன் இத்தாக்குதலில் ஈடுபட்டதாக அவர்களே ஒப்புக்கொண்ட தகவல்கள் வெளிப்படையாக உள்ளன. ஆனால் தேசியப் புலனாய்வு அமைப்பின் புலனாய்வில் இந்தத் தகவல்கள் அனைத்தும் மறைக்கப்பட்டுள்ளன. சம்ஜூதா குண்டுவெடிப்பு வழக்கில் தேசியப் புலனாய்வு அமைப்பின் குற்றப் பத்திரிக்கையை இந்த சாட்சியங்கள் முழுவதுமாக முறியடித்தன.

நடுநிலையான நம்பகமான சாட்சியங்களின் அடிப்படையிலான ஐ.நா ஆணையத்தின் பரிந்துரைகள்

அ) ஐ.நா பாதுகாப்பு சபையின் ஜூன் 2009 தீர்மானமும், அமெரிக்க கருவூலத் துறை ஜூலை 2009 இல் பகிரங்கமாக வெளியிட்ட அறிவிப்பும் சம்ஜூதா குண்டு வெடிப்புக்கு லக்சர் இ தொய்பாவின் தலைமை ஒருங்கிணைப்பாளரான ஆரிப் கஸ்மானிதான் நிதி உதவி அளித்ததை உறுதிசெய்துள்ளது. அந்த குண்டுவெடிப்பு சம்பவத்துக்கு ஆட்களை அல்கொய்தா இயக்கம் வழங்கியுள்ளது.

ஆ. அந்த குண்டு வெடிப்புக்காக பாகிஸ்தானியத் தீவிரவாதிகள் பயன்படுத்தப்பட்டதாக அந்நாட்டின் உள்துறை அமைச்சர் ரெஹ்மான் மாலிக்கும் ஜனவரி 2010இல் கூறியுள்ளார் (பத்தி 20).

இ. 2010 இல் டேவிட் கோல்மென் ஹெட்லியின் மூன்றாவது மனைவி பைசா ஔதல்ஹா அளித்த வாக்குமூலமும், இந்த குண்டுவெடிப்பு சம்பவத்தில் கோல்மென் ஈடுபட்டதையும், எதுவும் அறியாமலேயே தான் உடந்தையாக இருந்ததையும் தெரிவிக்கிறது.(பார்க்க வாக்கு மூலத்தின் 26 ஆவது பத்தி).(பத்தி 21 26) மற்றும்

ஈ. நார்கோ சோதனையில் சிமி இயக்கத்தின் தலைவர் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்திலும் இந்த தாக்குதலுக்கு உதவியதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சாட்சியங்கள் தேசியப் புலனாய்வு அமைப்பின் குற்றப் பத்திரிக்கையை முழுமையாக நம்பகம் இல்லாமல் ஆக்குபவை. ஆளும் அரசின் தீய நோக்கங்களை உறுதிப்படுத்துபவை.

(ஓ.பி.கோஹ்லி)

தலைமை நிலையப் பொறுப்பு